**கவனிக்க.-** *2023.06.09 ஆந் திகதிய 2336 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2337 - 2023 ජූනි මස 16 වැනි සිකුරාදා - 2023.06.16**

*2337 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 248 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

247 - B 082464 - 353 (2023/05)

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளார் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/68617.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: -LCD/16/LND/28/02/FI/Gen (1).

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம்வெஹர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 80 கீர்த்திபுர கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த தெற்குக் கரை குடா கம்மான 10 கிராமத்தின் நில வரைபட இலக்கம் LCD/10/LND/28/06/FI (01) இன், காணிப் பிரிவிடல் இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 4.5295 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. தெடிகமுவகே சோமசிறி என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி;
கிழக்கு : கால்வாய் ஒதுக்கம்;
தெற்கு : பாதை ஒதுக்கம்;
மேற்கு : பாதை ஒதுக்கம்.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2023.03.01 ஆம் திகதியிலிருந்து முப்பது வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) இறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.01 ஆம் திகதியிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செப்ப அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

மேற்படி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

S. V. A. D. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 26.

06 - 278

### காணி ஆணையாளார் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/70003.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: -SPLC/GAL/4/12/3/171.

### அரச காணிப்பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவிற்குப்பட்ட 188 ஏ மஹலபிடிய கிராம உத்தியோகத்தர் பிரிவின், மஹலபிடிய கிராமத்தில் உள்ள PLC/GA/BDD/2020/80 இலக்க உபநிரலில் காட்டப்படும் அளவின் 01 ஏக்கர் 02 றூட் 32.8 பேர்ச் அளவிலான அரசாங்கத்திற்கு சொந்தமான காணி துண்டில் வணிக நடவடிக்கைகளுக்கு திருமதி நாகஹவத்த ஆரச்சிகே தமரா குமாரி நாகஹவத்த அவர்களினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

வடக்கு : உ. பி. 370182 மற்றும் எம். ஜீ. விஜேசிங்ஹ அனுபவிக்கும் மஹம்பானே கனத்தேவத்த ;
கிழக்கு : எம். ஜீ. விஜேசிங்ஹ அனுபவிக்கும் மஹம்பானே கனத்தேவத்த மற்றும் உ. பி. 235881;
தெற்கு : உ. பி. 235881 மற்றும் உ. பி. 250234;
மேற்கு : உ. பி. 250234 மற்றும் உ. பி. 370182.

கோரப்பட்டுள்ள காணி தேவைப்படும் காரணத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும், ஆதலால் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைய காணியினை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள். (30) (2023.03.31 முதல் 2053.03.03 ஆந் திகதி வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆண்டு காணி மதிப்பீட்டு பெறுமதி ரூ. ஐந்து மில்லியனை (ரூ. 5,000,000.00) பார்க்கிலும் குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கமைய அவ் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் ஆண்டு காணி மதிப்பீட்டு பெறுமதி ரூ. ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) அதிகாரிக்கும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகை தொகை அனைத்து 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் முன்னைய 05 வருட இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

**பருவ பணம்** .- பருவ பணம் அறவிடப்படாது.

(ஆ) குத்தகைக்கு எடுப்பவர்களினால் குத்தகை ஆரம்பித்த திகதி முதல் 01 வருட காலத்திலுள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் இக் காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(இ) குத்தகை எடுப்பவரினால் இக் காணி வணிக நடவடிக்கைகளுக்கு தவிர வேறு எந்த காரணங்களுக்காகவும் உபயோகிக்க முடியாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விடுக்கப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை அமைய வேண்டும்;

(உ) நிர்மானித்த/ நிர்மானிக்கப்பட்ட கட்டிடங்களை நன்றாக அபிவிருத்தி நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட காலத்தில் குத்தகைதாரரினால் காணியினை பெற்றுக்கொண்ட காரணத்தினை அடையும் கால எல்லைக்குள் அடைய முடியாவிடின் குத்தகையினை முடிக்க நேரிடும்;

(எ) 2023.03.01 ஆம் திகதி முதல் 05 வருடங்கள் முடியும் வரை இடை குத்தகைகள் வழங்க அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகை வாடகை இடைவிடாது செலுத்த வேண்டியதுடன் குத்தகை வாடகை வழங்க தவரிய சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் உடனடியாக இரத்துச் செய்யப்படும். குத்தகை வாடகையினை தொடர்ச்சியாக செலுத்தாத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய பாக்கி குத்தகை வாடகைக்கு 10% வட்டி அறவிடப்படும்;

இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 06 வாரங்களுக்குள் குறித்த காணியினை குத்தகைக்கு வழங்க கூடாது என்பதற்கு காரணங்களை எழுதி எனக்கு முன்வைக்காவிடின் இவ் விண்ணப்பத்திற்கமைய குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரி. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 25.

06 - 307

---

### காணி ஆணையாளார் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/72164.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: -NWP/PLC/L10/WW/LTL/41.

### அரச காணிப்பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில் வனாத்தவில்லு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இல. 636/4 விஜயபுர கிழக்கு கிராம சேவகர்

பிரிவில் மொரபத்தாவ பிரதேச குடியேற்ற அதிகாரி அவர்களின் 2022/1 திட்டத்திற்கமைய துண்டு இல. 1 ஐ உடைய 5 ஏக்கர் அரச காணிப்பகுதி விவசாய வர்த்தக செயற்பாட்டிற்காக திரு. நிஹால் கித்சிரி ராஜபக்ஷ என்பவரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பிரதேச சபை வீதி ;
கிழக்கு : மொ. பொ. பீ. பீ 22 வரைபடத்தின் துண்டு இல. 1020;
தெற்கு : மொ. பொ. பீ. பீ 22 வரைபடத்தின் துண்டு இல. 1032;
மேற்கு : மொ. பொ. பீ. பீ 22 வரைபடத்தின் துண்டு இல. 1018.

கோரப்பட்டுள்ள காணியை தேவையான விடயத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக்காலம்.**-முப்பது வருடங்கள் (30) (09.04.2023 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் முப்பது வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை.**- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டு பெறுமானம் ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி அவ்வருடத்தின் காணிச் சந்தை பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி அவ்வருடத்தின் காணிச் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகை தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அம் முன்னைய 5 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகை தொகையுடன் 20% ஐ சேர்த்தல் வேண்டும்.

**தவணைத் தொகை** .- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(இ) இக் காணி விவசாய வர்த்தக செயற்பாட்டிற்காகவே அன்றி வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) இக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருடத்தினுள் மாகாண காணி ஆணையாளர்/பதில் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் அவர்களின் விருப்பின் படி அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், திட்டத்திற்கு பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை உட்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) அமைக்கப்படும்/அமைக்கப்பட்ட கட்டடங்கள் உரிய வகையில் அபிவிருத்தி தரத்தில் பராமரிக்கப்படல் வேண்டும்;

(எ) குத்தகை வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியில் குத்தகைக்காரினால் காணி பெற்றுக் கொண்ட விடயத்தை உரிய காலத்தில் நிறைவேற்ற தவறும் சந்தர்ப்பத்தில், குத்தகையை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 09.04.2023 ஆம் திகதி தொடக்கம் 5 வருடங்கள் செல்லும் வரை இடைக்கால குத்தகை அல்லது பரிமாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகை கூலியை தொடர்ச்சியாக செலுத்த வேண்டும் என்பதுடன், குத்தகை செலுத்த தவறும் பட்சத்தில் உடன்படிக்கை தானாகவே இரத்து செய்யப்படும்;

(ஒ) குத்தகை செலுத்துகைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவைக் குத்தகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்;

W. R. A. T. சகுந்தலா விஜே சுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 25.

06 - 308

---

## காணி ஆணையாளார் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/62203.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: -UPLC/L/26/KG/L/66.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொனராகலை மாகாணம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 146B, தெட்டகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த காவந்திஸ்ஸ மாவத்த கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் எப். வி. பி. இலக்கம் 25 இன் காணித் துண்டு இலக்கம் 1371 மற்றும் 1372 இன் ஒரு பகுதியைக் காட்டும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள வரைபடத்தின் இலக்கம் UVA/MO/KTG/136 - B/LTL/165 இல் காட்டப்படுகின்ற 01 றூட், 04.3 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை

வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. லொக்கு எதிரிசிங்க ஆராச்சிகே நிமல் எதிரிசிங்க என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : டீ. டீ. பலிஹக்காரவுக்குச் சொந்தமான இடம்;
கிழக்கு : என். கே. எச். மொஹிதீனுக்குச் சொந்தமான இடம், அரச இடம் (ஹவாய் இன்);
தெற்கு : கம்உதாவவிலிருந்து கதிர்காமம் வரையான வீதி;
மேற்கு : ஹன்ச மாவத்த.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .–முப்பது (30) வருடங்கள் (2022.07.07 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.– 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.07.07 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
“மிஹிகத்த மெதுர”,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 30.

06 - 309

---

## காணி ஆணையாளார் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/74453.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்: -P. L. C./06/1/eslims/Walal/06.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

01. களுத்துறை மாவட்டம், வலல்லாவிட்ட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 843E, துங்தொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஹெவெஸ்ஸ கிராமத்தின் நிலவரைபட இலக்கம் Ka/WLL/09/296 இனையுடைய காணித் துண்டு இலக்கம் A யின்மூலம் காட்டப்படுகின்ற 1.9795 ஏக்கர் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு மஹாராஹாமிலாகே சுனில் திசாநாயக்க என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 1060;
கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 1060;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 1060, இந்த நிலவரை படத்தின் காணித் துண்டு இலக்கம் 8 மற்றும் தென் பகுதி;
மேற்கு : தென் பகுதி மற்றும் காணித் துண்டு இலக்கம் 1060.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசனால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2023.02.10 ஆம் திகதியிலிருந்து 2053.02.09 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் மூலம் அனுமதிக்கப்பட்ட வருடத்தின் காணியின் அதிகாரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் மூலம் அனுமதி வழங்கப்பட்ட வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4 ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.02.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஆர். மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, யூன் 02.

06 - 310